கூரை ஓடுகள்:-
மான் மார்க், தேனீ மார்க், புலி மார்க், நாருவி மார்க், செவன ஓடுகள்.
M. T. சோமசுந்தரம் & சன்ஸ்
99, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி: பாதுகாதேவி
தொலைபேசி: 23845

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

பூச்சாடிகள்
Floor Tiles
கிறில்
(நவீன டிசைன்கள்)
உங்கள் ரசனைக்கேற்றவாறு தெரிவு செய்துகொள்ளுங்கள்.
M. T. Somasundaram & Sons
Ceylon Tiles Merchants
199, Power House Road
JAFFNA.
Gram: Pathukathevi
Phone: 23845

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹுடு மார்கழி மீ 02 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 04 (17-12-1985) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-21

# வடக்கே குவிகிறது அரச படைபலம்

## இரவு ரோந்துக்கு கனரக வாகனங்களும் வீரர்களும் நூற்றுக்கணக்கில் வருகை

— அலுவலகச் செய்தியாளர் : வனிராஜ் —

யாழ்ப்பாணம், டிச. 17

வடக்கில் படைபலம் குவிக்கப்படுகிறது. அதன் ஒரு கட்டமாக நேற்று மட்டும் 25 கனரக கவச வாகனங்கள் இங்கே வந்தன. 300க்கும் அதிகமான இராணுவ வீரர்களும் நேற்று வடக்கே வந்து சேர்ந்தனர்.

கடந்த சுமார் ஒரு மாதத்தில் இரண்டாவது முறையாக இராணுவ வாகனங்களுடன் வீரர்கள் வடக்கே வந்துள்ளனர்.

நேற்று வந்து சேர்ந்த கனரக கவச வாகனங்கள் கண்ணி வெடிகளினால் அதிகம் சேதமடையா. விசேஷ சமிக்ஞைகள் மூலம் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பது பற்றிய தகவல்களை முன் கூட்டியே தெரிவிக்கக் கூடியவை.

சக்தி வாய்ந்த விசேஷ தொலை தொடர்பு வசதிகள் கொண்டவை. இரவு ரோந்துக்கு என விசேஷமாக அனுப்பப்பட்டவை.

இந்த கனரக வாகனங்கள் சகிதம் 300 படை வீரர்கள் நேற்று நடைபவனியாக அனுராதபுரத்திலிருந்து ஆனையிறவு வந்து சேர்ந்தார்கள்.

வழியெங்கும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. எல்லா பொது அரச வாகனங்களும் சோதனையிடப்பட்டன,

படை வீரர்களின் நடை பவனியால் போக்குவரத்து நேற்று தடைப்பட்டது.

கொழும்பிலிருந்து ரயிலில் அனுராதபுரம் வரை வந்து அங்கிருந்து பஸ்களில் யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணம் செய்த பிரயாணிகளே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

இவர்களை பஸ்களில் ஏற்றி வந்தவர்கள் பாதுகாப்புப் படை வழியில் நடை பவனியாகச் செல்கிறது என்று காரணம் காட்டி இடை நடுவில் இறக்கி விட்டுவிட்டார்களாம்.

ஈரற்பெரியகுளம், மதவாச்சிப் பகுதியில் இறக்கிவிடப்பட்ட பிரயாணிகள் பின்னர் ஒருவாறு வவுனியா வந்து சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

வவுனியாவிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு போக்கு

(4-ஆம்பக்கம் பார்க்க)

### சிங்களப் பயணி கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், டிச.17

செங்கலடியில் இருந்து ஏறுவூர் நோக்கிச் சென்று கொண்டு இருந்த வான் ஒன்று வழிமறிக்கப்பட்டது.

இனந்தெரியாத நபர்கள் அந்த வானில் இருந்த சிங்களவர் ஒருவரைக் கடத்திச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சபவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து செங்கலடி, ஏறுவூர் பகுதிகளில் பதற்ற நிலைமை நிலவுகின்றது.

## கடத்தப்படும் வாகனங்கள்: அறிவிக்காத உரிமையாளர் மீது நடவடிக்கை

கொழும்பு, டிச. 17

கடத்திச் செல்லப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள், அது பற்றி பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

அப்படி அறிவிக்காத நிலையில் அந்த வாகனங்கள் போராளிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டால் போராளிகளுக்கு உதவியதாகவே உரிமையாளர்களும் கருதப்படுவர்.

அந்த உரிமையாளர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையும் எடுக்கப்படுமாம்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தீர்மானித்து உள்ளதாக தெரிய வருகிறது.

மாவட்ட இணைப்பு அதிகாரிகளுக்கு இது சம்பந்தமாக பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்பு வட்டாரங்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள வாகனங்களின் விவரங்களைச் சேகரித்துள்ளன—

போராளிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்களின் விவரங்களை அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்த பொழுது வாகனங்கள் கடத்தப்பட்டமை குறித்து சில வாகன உரிமையாளர் பாதுகாப்பு அதிகாரிகளிடம் புகார் செய்யாமல் இருந்துள்ள சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் – தெரியவந்துள்ளது.

அதைத் தொடர்ந்தே வாகனங்கள் கடத்தப்பட்டமை குறித்து புகார் செய்யாத உரிமையாளர்களையும் பயங்கரவாதி என்று கணித்து நடவடிக்கை எடுக்க பாதுகாப்பு வட்டாரங்கள் முடிவு செய்துள்ளன என்று நம்பகரமாகத் தெரிகின்றது.

கடத்தப்பட்ட அரசாங்க வாகனங்கள் பற்றிய பட்டியல் ஒன்றையும் பாதுகாப்பு வட்டா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

17 - 12 - 1985

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10–53முதல் 12–23 வரை

ராகுகாலம்:
3-23 முதல் 4-53 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

விநாயக சஷ்டி விரதம்

### வடக்கிற்கு மா வந்தது

திருகோணமலை, டிச.17

14,338 மூடை பிரிமா கோதுமை மாவுடன் கப்பல் ஒன்று காங்கேசன்துறை இன்று அதிகாலை வந்து சேர்ந்தது.

கப்பலின் பெயர் 'பெந்தோட்டை.'

### ஆயுதப்படை கொண்டு வந்த சடலங்கள்

மட்டக்களப்பு, டிச. 17

திங்கட்கிழமை காலை 7 பணியளவில் இரண்டு தமிழ் இளைஞரின் சடலங்கள் கல்முனை ஆஸ்பத்திரியில் ஆயுதப்படையினரால் ஒப்படைக்கப்பட்டன.

பின்னர் அந்த இரண்டு சடலங்களும் ஆயுதப் படையினரால் அகற்றப்பட்டன.

துறைநீலாவணைப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்த இரண்டு இளைஞர்களும் கொல்லப்பட்டனர் என்றுதெரியவருகின்றது.

## பொதுமக்கள் பாவனைக்கு மகாதேவா தாம்போதி நேற்று திறந்துவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிச 17

மகாதேவா தாம்போதி திங்கட்கிழமை காலை சுபநேரத்தில் பொது மக்கள், உபயோகத்துக்கு திறந்து விடப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. எஸ். நடராசா ஆகியோர் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்.

மகாதேவா தாம்போதித் திட்ட பொறியியலாளர் திரு. சு. இராமகிருஷ்ணன், தேங்காய் உடைத்தார்.

பின்னர் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவர் திரு. எஸ். நடராசா, திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன், பிரதம பொறியியலாளர்களான திரு. சு.

(4ம் பக்கம் பார்க்க)

## எரியும் வீட்டில் பிடுங்க நினைத்தவர் கூண்டிற்குள்

திருகோணமலை டிச. 17

ஆயுதப் படை முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்து தருவதாகக் கூறி லஞ்சம் வாங்கியதாகக் கூறப்படும் 3 நபர்களை, விசேஷ புலனாய்வுப் பொலீஸார் திருமலையில் கைது செய்தனர்.

கைதானவர்களின் உறவினர்களிடம் இருந்து முதலாவது சந்தேக நபர் 2,500 ரூபா வாங்கியதாகவும், இரண்டாவது சந்தேக நபர் 10,000 ரூபா வாங்கியதாகவும், மூன்றுவது சந்தேகநபர் 3,500 ரூபா வாங்கியதாகவும் பொலீஸாரின் விசாரணையில் வெளியானது.

விளக்க மறியலில் வைக்கப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் பொதுமக்கள். அதுவும் தமிழர்கள்.

## அகதி முகாமிலிருந்த 23 பேர் திருமலையில் கைது

திருகோணமலை, டிச 17

திருகோணமலை நகரில் அகதி முகாம் ஒன்றில் தங்கியிருந்தவர்களில் 23 தமிழர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 21பேர் ஆண்கள். 2 பேர் இளம் பெண்கள்.

திருமலை சென் மேரிஸ் பெண்கள் கல்லூரியில் இம் முகாம் உள்ளது.

முகாமின் பொறுப்பாளரான திரு. கமலநாதன் என்பவரும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர்.

முகமூடி அணிந்த ஒருவரை ஆயுதப்படையினர் கொண்டு வந்தனர் என்றும் —

அந்த முகமூடி நபர் தலையாட்டியதைத் தொடர்ந்தேஅந்த 23 பேரும் கைதாகினர் என்றும் தெரியவருகின்றது.

## ஆசிரியர் பற்றி மதிப்பீடு அதன் பின்பே இடமாற்றம்

கொழும்பு, டிச 17

ஆசிரியர்களைப் பற்றி மாவட்ட ரீதியில் பூர்வாங்க மதிப்பீடு ஒன்று உடனடியாக மேற்கொள்ளப்படும்.

அதன் பின்னரே 1986 ஆம் ஆண்டுக்குரிய ஆசிரிய இடமாற்றம் பற்றி தீர்மானிக்கப்படும்.

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள ஆசிரிய பற்றாக்குறை பற்றிய தகவல்களை சேகரித்து —

அதன் அடிப்படையில் ஆசிரிய இடமாற்றங்களைச் செய்வதற்கே கல்விச் சேவை ஆணைக்குழு இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது.

### துப்பாக்கிச் சூட்டுக்கு இருவர் பலி

திருகோணமலை, டிச.17

திருகோணமலை மாவட்டத்தில் புளியங்குளம் என்னும் இடத்தில் இரண்டு தமிழ்ப் பொது மக்கள் துப்பாக்கிச் சூட்டினால் மரணமானார்கள்.

திங்கட்கிழமை அதிகாலை ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலின்போது இச்சம்பவம் இடம்பெற்றது.

இனப் பிரச்சினை:

## அரசியல் தீர்வுதான் அரசின் நோக்கம்

### லலித்தின் புதிய விளக்கம்

திவுலப்பிட்டிய, டிச.17

நாட்டின் இனப்பிரச்சினையை இராணுவத் தீர்வு மூலம் தீர்க்கவேண்டும் என்று அரசாங்கம் நினைக்கவில்லை. அரசியல் தீர்வுதான் நல்ல மார்க்கம் என்று அது கருதுகிறது.

இவ்வாறு தெரிவித்தவர் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி.

திவுலப்பிட்டியவில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் திரு. லலித்அத்துலத் முதலி பேசினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது :–

நாம் படைகளைப் பலப்படுத்துகிறோம். இராணுவ நடவடிக்கை மூலமே பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாகக் காட்டிக் கொள்கிறோம். ஆனால் அவ்வாறு செய்வது எங்கள் நோக்கமல்ல.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதே எமது முழு விருப்பம். இராணுவத் தீர்வு போலக் காட்டிக் கொள்வது தமிழ்ப் போராளிகள் எமது பலத்தை அறிய வேண்டும் என்பதற்காகவே.

அரச படைகள் எவ்வளவு சக்தி உடையனவாக இருந்தாலும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது.

ஆனாலும் வன்செயல் மூலம் வெற்றி காண முடியாது என்ற எண்ணத்தை போராளிகள் மனதில் ஏற்படுத்தக் கூடிய விதத்தில் ஆயுத பலத்தைப் பெருக்க வேண்டும்.

அனுராதபுரம் தாக்குதலின் பின்னர் சிங்கள மக்கள் நடமாடவே அஞ்சினர். இன்று அந்த நிலை இல்லை.

பாதுகாப்புப் படையினருடன் மோத முடியாது உள்ளது என்று போராளிகளே கூறுகின்றனர்.

முன்பு ஒரு பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டால் அந்த பொலீஸ் நிலையம் மூடப்பட்டுவிடும். இன்று அந்த நிலை இல்லை.

பயங்கர வாதத்தால் பாதிக்கப்படும் பகுதிகளை அப்படியே நரகமாக இருக்க விட்டுவிடக் கூடாது. அவற்றையும் நகரமாக மாற்ற வேண்டும் ஏனெனில் அங்கு வாழ்வதும் மானிட சமுதாயமே.

1971 - ஆம் ஆண்டு இடம்பெற்ற பயங்கர வாதத்தையும் இப்போதைய பயங்கரவாதத்தையும் ஒப்பிடமுடியாது.—

இலங்கையின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க பாகிஸ்தான் உதவும் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி உறுதி அளித்து உள்ளார்.

இப்படி பாகிஸ்தான் உறுதியளிக்கும் என்று முன்பு யாரும் நம்பி இருந்தீர்களா? என்றார்.

★ ஜே. ஆரைச் சந்தித்த கையோடு

# டிக்ஸிற் புதுடில்லி விரைவு

கொழும்பு, டிச.17

இனப் பிரச்சினை தீர்வுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த மாற்று யோசனைகள் பற்றி ஜனாதிபதி திரு. ஜே.ஆர் ஜெயவர்த்தனவுடன் நேற்றுப் பேசிய கையோடு இந்தியத் தூதுவர் திரு. ஜே.என்.டிக்ஸிற் இந்தியா விரைந்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியா-உல்-ஹக் நேற்று முன்தினம் நாட்டை விட்டு புறப்பட்ட கையோடு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேசினார்.

ஸியாவின் இலங்கை விஜயம் பற்றியும், அவ்வேளையில் வெளியிடப்பட்ட அறிக்கைகள், கருத்துப்பரிமாற்றம் ஆகியவைகள் பற்றியும் ஜனாதிபதி திரு. ஜே.ஆர் ஜெயவர்த்தன இந்திய தூதுவருக்கு விளக்கம் அளித்தார்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக

(4-ம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுக்கு

## சமசமாஜக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு

கொழும்பு, டிச. 17

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு எந்நேரமும் அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்க லங்கா சமசமாஜக் கட்சி தயாராக இருக்கிறது.

அக் கட்சியின் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா இப்படிக் கூறினார்.

அக்கட்சியின் 50ஆவது ஆண்டு தினம் நாளை ஆகும். அதனை ஒட்டி பத்திரிகையாளர்மாநாடு ஒன்றை கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா கூட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இது சிங்கள – தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை இல்லை.

பல மத, பல இன மக்கள் வாழும் ஒருநாட்டில் ஏற்பட்டிருக்கும் சமூகப் பிரச்சினை இது.

சோசலிஸ ரீதியிலேயே இதற்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்றார்.

### முச்சந்தி முரளி



அருகிலே இருக்கிற பூநகரி, துணுக்காய் பக்கத்துக்கும் கூடப் போக விரும்பாத எங்கடை யாழ்ப்பாணத்து வாத்திமாருக்கு இப்பவே கஷ்டப் பிரதேசம் எண்டதும் வயித்தைக் கலக்குமே!

## பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண வேண்டும்

### இந்தியா மீண்டும் வலியுறுத்து

புதுடில்லி, டிச.16

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும். இராணுவத் தீர்வு காண முடியாது. இதனை இந்தியா மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் பி. ஆர். பகத் இப்படிச் சொன்னார்.

தனது அமைச்சின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிடமே அவர் இதனை இன்று தெரிவித்தார்.

இலங்கையில் நடக்கும் வன்முறைகள் பற்றி குழு உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

அதற்கு அவர் பதிலளித்துப் பேசினார்.

இலங்கையின் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அங்குள்ள தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் இதுவே பாரத அரசின் நிலை.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கட்சிகள் மீதான தடை ஜனவரியுடன் நீங்கும்

## பங்களாதேஷ் ஜனதிபதி எர்ஷாட் அறிவித்தார்

டாக்கா, டிச 16

பங்களாதேஷில் உள்ள அரசியல் கட்சிகளின் மீதான தடை உத்தரவு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நீக்கப்படும்.

பங்களாதேஷ் ஜனாதிபதி முகமது எர்ஷாட் இன்று (திங்கட்கிழமை) தேசிய வானொலியில் பேசுகையில் அறிவித்தார்.

அரசியல் கட்சிகள் மீது 9 மாதங்களுக்கு முன்னர் இத்தடை விதிக்கப்பட்டது.

பங்களாதேஷின் 14 ஆவது சுதந்திர தினம் டிசம்பர் 16 இல் கொண்டாடப்பட்டது.

அத்தினத்தை ஒட்டி ஜனாதிபதி வானொலியில் உரை நிகழ்த்தினார்.

இராணுவச் சட்டத்தை நீக்கி, ஜனநாயக முறையை மீண்டும் அமுல் நடத்தத் தான் தீர்மானித்து இருப்பதாகவும் ஜனாதிபதி தனது உரையில் சொன்னார்.

ஆனால் ஜனாதிபதியின் பேச்சு பங்களாதேஷில் உள்ள பிரதான எதிர்க் கட்சிகளின் கூட்டணியைத் திருப்தி செய்யத் தவறிவிட்டதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

கூட்டணித் தலைவரும் முன்னாள் வெளிநாட்டு அமைச்சருமான கமால் ஹுசேன் கருத்து வெளியிடுகையில் ஜனாதிபதி அறிவிப்பு மக்களின் கோரிக்கைகளில் ஒரு பகுதியைத்தான் பூர்த்தி செய்துள்ளது என்றார்.

1982 இல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இராணுவச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். இதனை வலியுறுத்தி நாடெங்கும் எதிர்க் கூட்டணி மேற்கொள்ளப்பட விருக்கும் இயக்கம் எக்காரணம் கொண்டும் கைவிடப்பட மாட்டாது — இப்படி கூட்டணித் தலைவர் கமால் ஹுசேன் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்தார்.

### கிளர்ச்சியாளர் மனமாற்றம்

இஸ்லாமபாத், டிச16

585 ஆப்கன் கிளர்ச்சியாளர்கள் மனம் மாறி ஆப்கானிஸ்தானின் இராணுவத்தில் சேர்ந்து விட்டனர்.

இப்படி காபூல் வானொலி அறிவித்தது.

ஜமாயித் இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த கெரில்லாக்கள் இவர்கள்.

### பிரார்த்தனை பலித்தது சிவகுமார் சொல்கிறார்

ஓவியராக இருந்து பின் திரையுலகிற்கு வந்தவர் சிவகுமார். சுமார் பதினெட்டு வருடங்களாக எந்தவித ஆடம்பரமுமின்றி இவர் திரையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

அண்மையில் நடந்த ஒரு விழாவில் இவர் முதலமைச்சர் எம். ஜி. ஆரின் காலில் விழுந்து பரிசு வாங்கி இருந்தார்.

இது பற்றிப் படவுலகில் பலவாறு கிசுகிசுக்கப்பட்டது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக அவரே இதைப்பற்றி விளக்கம் அளித்திருந்தார்.

அவர் கூறியிருந்த விளக்கம் இதுதான்;

"எம். ஜி. ஆர் காலில் விழுந்து பரிசு பெற்றதை மனப்பூர்வமாக உணர்ந்துதான் செய்தேன். இது ஒன்றும் குறைவான செயலாக எனக்குத் தோன்றவில்லை.

தொழிலில் அவருக்கு இருந்த ஈடுபாட்டையும் நேர்மையையும் கண்டு வியந்துள்ளேன். அவரை ஒரு உயர்ந்த மதிப்புக்குரியவராக நான் போற்றுகிறேன்.

அமெரிக்காவில் இவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக அவர் செய்த தர்மங்களும், மக்களுடைய பிரார்த்தனையும்தான் அவரின் உடல்நிலை முன்னேற்றத்திற்கு காரணம் என்பதை உறுதியாக நான் நம்புகிறேன்.

இந்தக் காரணத்தை நினைக்க நினைக்க மனம் பஞ்சைப்போல இலேசாகி ஒரு இனம்புரியாத பெருமிதமும் மலர்ச்சியும் தோன்றுகிறது.

இதை வெளிப்படுத்துவதற்கு வேறு ஒரு வழியும் எனக்குத் தோன்றவில்லை. அதற்கு ஒரே வழி அவர் காலில் விழுவதாகத்தான் இருக்க முடியும், இதை நன்றாகத் தெரிந்துதான் செய்தேன்" என்று மிக உணர்ச்சியோடு சொன்னார் சிவகுமார்.

தினசரி சினிமா

டாக்கா முத்திரை வெளியீடு

## இந்தியா எதிர்க்க வைபவம் ரத்து

டாக்கா, டிச. 16

டாக்கா உச்சி மாநாட்டு முத்திரை வெளியீட்டு விழா இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

உச்சி மாநாட்டை ஒட்டி தெற்காசிய நாடுகள் ஒவ்வொன்றும் விசேட முத்திரைகளை வெளியிட்டிருந்தன.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் நிறுவப்பட்டதன் ஞாபகார்த்தமாக, இம்முத்திரைகளின் முதல்நாள் உறைகள் வெளியீட்டு விழாவை டாக்காவில் நடத்தத் திட்டமிடப்பட்டு இருந்தது.

அந்த நிகழ்ச்சியில் ஏழு நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்வதாக இருந்தது.

இறுதி நேரத்தில் அந்த வைபவம் ரத்துச் செய்யப்பட்டது.

பாகிஸ்தான் வெளியிட்ட முத்திரையில், தற்சமயம் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு – காஷ்மீர் பகுதிகளை அடக்கிய வரைபடம் இருந்ததே இதற்குக் காரணமாகும்.

இந்தியா தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. உடனே வைபவம் ரத்தானது.

## 700 பூனைகள், நாய்கள் ஜப்பானியர் வளர்க்கிறார்

ஜப்பான், டிச 16

பகலில் முகவராகவும் இரவில் கெய்ஷா பணிப் பெண்ணாகவும் வேலைபார்க்கும் ஒரு ஜப்பானிய பெண் வளர்க்கும் 700 பூனைகளுக்கும் நாய்களுக்கும் உணவளிக்க பிரெஞ்சு வர்த்தக நிறுவனம் ஒன்று உதவி அளிக்க முன்வந்துள்ளது.

54 வயதான நிச்சிக்கோ பியூஜிடா என்ற இந்தப் பெண், கைவிடப்பட்ட பூனைகளையும் நாய்களையும் வளர்த்து வருகின்றார். அவைகளை வைத்து அவரால் பராமரிக்க முடியவில்லை.

இதுபற்றி பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுத்தார்.

பிரெஞ்சு வர்த்தக நிறுவனம் இதைக் கேள்விப்பட்டது.

மறுநாள் அப்பெண்ணின் வீட்டுக்கு 37 தொன் நிறையுள்ள உணவு வகைகளை லொறி மூலம் அந்த நிறுவனம் அனுப்பி வைத்தது.

85,000 டாலர் பெறுமதியான உணவு வகைகள் பூனை, நாய்களைப் பல மாதங்களுக்குப் பராமரிக்கப் போதுமானவை.

## வெளி உலகில்

ஆபிரிக்க பொருளாதார நெருக்கடி

### நாணயச்சபை, உலகவங்கி மீது யுனிசெப் குற்றம் சுமத்துகிறது

நைரோபி, டிச. 16

ஆபிரிக்க நாடுகளில் பொருளாதார சமூக நெருக்கடி அதிகரித்துள்ளதற்குக் காரணம் சர்வதேச நாணயச் சபை, உலக வங்கி ஆகியவற்றின் வற்புறுத்தல்களினால் அமுல் நடத்தப்பட்ட குறுகிய கால பொருளாதார சீர்திருத்தங்களே.

இப்படி யுனிசெப் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

அபிவிருத்திகள் சமூகப் பிரச்சினைகளைப் புறக்கணித்து விட்டன.

இதன் காரணமாக உலகத்தின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க ஆபிரிக்க நாடுகளில் வாழும் குழந்தைகள் தேக ஆரோக்கியம் குறைந்தே காணப்படுகின்றனர்,

ஏனைய பகுதிகளில் முன்னேற்றம் காணப்படும் போது ஆபிரிக்காக் கண்டத்தில் நிலைமை மோசமடைந்தே வருகின்றது.

ஆய்வு ஒன்றில் ஆபிரிக்க சஹரான் பகுதிகளில் உள்ள 5 வயதுக்குட்பட்ட 1 கோடி குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றன. இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இப்படி யுனிசெப் ஸ்தாபனம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### தேர்தலில் மோசடி கயானா எதிர்கட்சி குற்றச்சாட்டு

ஜோர்ஜ்டவுன் டிச 16

கயானா நாட்டுப் பொதுத் தேர்தலில் மோசடி நடந்துள்ளது.

இப்படி எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து திருச்சபைகள், தொழிற்சங்கங்கள் குடியியல் உரிமை ஸ்தாபனங்கள் குரல் எழுப்பியுள்ளன.

அண்மையில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் கயானாவின் ஆளும் கட்சியான மக்கள் தேசியக் காங்கிரஸ் பெரும் வெற்றியீட்டியது தெரிந்ததே.

ஆளும் கட்சிக்கு 76 சதவீதமான வாக்குகள் கிடைத்தன என்று அறிவிக்கப்பட்டது.

அடுத்து வந்த எதிர்க் கட்சியான மக்கள் முன்னேற்றக் கட்சி பெற்ற வாக்குகளிலும் பார்க்க இத்தொகை 5 மடங்கு அதிகமாகும்.

மோசடிக் குற்றச்சாட்டை அரசாங்கம் நிராகரித்துள்ள போதும், திருச்சபைத் தலைவர்கள் தேர்தலை நடத்திய விதம் குறித்து அதிருப்தி தெரிவித்து உள்ளனர்.

### மூன்றில் ஒரு பங்கினர் உளவாளிகள்

வாஷிங்டன், டிச16

அமெரிக்காவில் பணியாற்றும் 4000 கம்யூனிஸ்ட் ராஜதந்திரிகளில் மூன்றில் ஒரு பங்கினர் உளவாளிகளாம்.

அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினர் இப்படிக் கூறியுள்ளனர்.

"பயங்கரவாதத்திலும் பார்க்க உளவு பார்ப்பது மிகவும் அபாயகரமானது"— இப்படி சமஷ்டிப் புலனாய்வுப் பகுதி இயக்குநர் வில்லியம் வெப்ஸ்டர் தேசிய பத்திரிகைக்கழகத்தில் பேசுகையில் சொன்னார்.

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளான கிழக்கு ஜேர்மன், போலந்து, பல்கேரியா, செக்கோஸ்லேவேகியா ராஜதந்திரிகள் அமெரிக்காவில் நடமாடுவதற்கு பலத்த கட்டுப்பாடுகளை ராஜாங்க அமைச்சு கடந்த திங்கட்கிழமையில் இருந்து கொண்டு வந்துள்ளது.

### ரஷ்யாவின் சாதனை!

மாஸ்கோ, டிச 16

20 அணு ஏவாயுதத் தளங்களை ரஷ்யா அகற்றி விட்டது. சோவியத் தலைவர் மிக்கெயில் கோர்பச்சேவ் இத்தகவலை வெளியிட்டார்.

ரஷ்யாவிற்கு விஜயம் செய்த பிரெஞ்சு நாடாளுமன்றத் தலைவர் திரு. லூயி மெர்மஸ் என்பவரிடம் திரு. கோர்பச்சேவ் இதனைத் தெரிவித்ததாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

### பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது

திருவனந்தபுரம், டிச. 16

கேரள மாநிலத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றை, கோஷ்டி ஒன்று தாக்கியது.

பொலிஸார் சுட்டதில் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் மரணமானார்.

ஞாயிறு இரவு, திருவனந்தபுரத்தில் உள்ள மஞ்சேரி என்ற இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பொலிஸ் காவலில் இருந்த ஒருவர் மரணமான சம்பவத்தை ஆட்சேபித்தே கோஷ்டி பொலிஸ் நிலையத்தைத் தாக்கியது.

## அம்பாறையில் ரூ. $1\frac{1}{2}$ லட்சம் கொள்ளை

கொழும்பு, டிச. 17

அம்பாறையில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பணம் கொள்ளை இடப்பட்டது.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

அம்பாறையில் சென்றல் காம்ப் என்ற இடத்தில் வெள்ளிக்கிழமை பகல் 4 சிங்களவர்கள் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்தனர்.

இனந் தெரியாத கோஷ்டி ஒன்று திடீரென்று தோன்றி இவர்களைத் தாக்கியது.

ஒருவர் வைத்திருந்த 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துக் கொண்டு அந்தக் கோஷ்டி மறைந்து விட்டது.

இது பற்றி ஆயுதப் படையினர் விசாரணை நடத்துகின்றனர்.

### கொள்ளை

மட்டக்களப்பு டிச. 17

மட்டக்களப்பு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினுள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் காகிதாதிகளைக் கொள்ளை இட்டுச் சென்றனர்.

சனிக்கிழமை காலை 10 மணி அளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

## போராளிகள் மீதான வழக்குகள் இழுத்தடிப்பு

கொழும்பு. டிச 17

சிறையில் வாடும் விடுதலைப் போராளிகள் மீதான வழக்கு விசாரணைகள் இன்னும் இழுத்தடிக்கப்பட்டு இருக்கின்றன.

சிரேஷ்ட அரச சட்டத்தரணிகள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதே இதற்குக் காரணம்.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் ஏராளமான வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணைக்குக் காத்துள்ளன.

இந்த ஆண்டில் இதுவரை மட்டும் சிரேஷ்ட அரச சட்டத்தரணிகளில் பத்துப் பேர் வெளிநாடு சென்று விட்டனர்.

இப்பொழுது சிரேஷ்ட அரச சட்டத்தரணிகள் ஒன்பது பேரே சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணி புரிகின்றனர். ஆதல் வழக்கு விசாரணைகள் மும்மடங்காக அதிகரித்துள்ளன.

இந்த ஒன்பது சட்டத்தரணிகளுமே சிறையில் உள்ள தமிழ் இளைஞர் மீதான வழக்கு விசாரணை நடத்த வேண்டும்.

இதனால் வழக்கு விசாரணைகள் காலதாமதமாகும் நிலை ஏற்பட்டு உள்ளதாக நீதி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு உள்ளது.

### அரசியல்வாதி மீது ஊழல் புகார்

கொழும்பு, டிச. 17

வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவர்மீது ஊழல் புகார்கள் சுமத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள ஐ.தே.க. கிளைகள் அந்த அரசியல்வாதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளன.

தேசிய பாதுகாப்பு நிதி, அபிவிருத்தி நிதி, கசி நிதி முதலியவற்றைத் துஷ்பிரயோகம் செய்தது உட்பட 35 குற்றச்சாட்டுக்கள் இந்த அரசியல்வாதிமீது சுமத்தப்பட்டுள்ளன.

இதுபற்றி விசாரணை செய்ய குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# தமிழ் காக்க இளைஞர் தியாகம்; சைவம் காக்கவும் அது தேவை

### நல்லை ஆதீன முதல்வர் அழைப்பு

யாழ்ப்பாணம், டிச 17

தமிழைக் காப்பதற்கு இளைஞர்கள் முற்றிலும் தம்மையே தியாகம் செய்கின்றனர் அதுபோலவே சைவத்தைக் காப்பதற்கும் இளைஞர்கள் முன்வரவேண்டும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு பேசினார்.

ஏழாலை சைவ சமய அபிவிருத்திச் சங்கத்தின் 63 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவில் அருளுரை நிகழ்த்துகையில் நல்லை ஆதீன முதல்வர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த இந்த வைபவத்திற்கு சங்கத்தலைவர் திரு. சி. சக்திகிரீவன் தலைமை வகித்தார்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபைத் தலைவர் சித்தாந்த வித்தகர் திரு. மு. ஞானப்பிரகாசம் தொடக்க உரை நிகழ்த்துகையில், சொன்னதாவது:

இன்னல்களும் கஷ்டங்களும் நிறைந்த இந்தக் காலகட்டத்தில் அவற்றை எதிர்கொள்ள வேண்டும். அதன் மூலம் பாரம்பரிய பண்பாட்டையும் தனித்துவத்தையும் பேணலாம்.

சங்கத்தின் 63 ஆண்டு காலப்பணி சைவ உலகில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அது வரவேற்கத்தக்கது.

இது போன்ற சங்கங்களின் செயற்பாடுதான் மதமாற்றம் அந்நிய நாகரிக மோகத்தையும் தடுத்து நிறுத்தியது.

வளங்களுக்கு ஏற்ப கிராமங்கள் தோறும் சிறுகைத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்காக தமிழ் இயக்கங்கள் முன்வினறு உழைக்க வேண்டும். இப்படி திரு. ஞானப்பிரகாசம் கேட்டுக்கொண்டார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமயத்துறை விரிவுரையாளர் திருமதி மங்கயற்கரசி திருச்சிற்றம்பலம் பேசுகையில் இளைஞர்களின் எழுச்சியில்தான் சைவ உலகின் ஒளிமயமான எதிர்காலம் தங்கியுள்ளது என்று சொன்னார்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதர், வித்துவான் அருள்மொழி அரசி ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதன், கல்வி அதிகாரி எஸ். மகேசன், யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு. சி. முருகவேள் ஆகியோரும் பேசினர்.

வடகோவை சித்தாந்த ஞானபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களின் பணிகளைப் பாராட்டி பண்டிதர் மு. கந்தையா பேசினார். அவருக்கு சிவஸ்ரீ ஸ்கந்த சாமபசிவக் குருக்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

சைவ அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதர் பரிசுகளை வழங்கினார்.

### புலியும் கண்ணிவெடியும் சிங்கங்களை என்ன செய்யும்?

கொழும்பு, டிச. 17

புலிகளும் கண்ணிவெடிகளும் வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையில் சேவை புரியும் 'லயன்'களை ஒன்றும் செய்யமுடியாது.

மாவட்ட லயன் கிளப் கவர்னர் திரு. டன்ஸ்ரன் கெலார்ட் மேற்கண்டவாறு கூறினார்.

களனி வெலி லயன்ஸ் கிளப் கூட்டத்தில் கவர்னர் உரையாற்றுகையில் இக்கருத்தை வெளியிட்டார்.

'லயன்'கள் உயிரைக் கொடுத்து மக்களுக்குச் சேவை புரியத்தயாராக உள்ளார்கள். தேச நலனுக்காக 'லயன்'கள் பணி புரியத் தவறியது இல்லை. எதிர்காலத்திலும் 'லயன்'களின் சேவை தொடரும்.

இப்படி அவர் மேலும் சொன்னார்.

### நாட்டு பாதுகாப்புக்கு கூடுதல் நிதிஒதுக்க நிர்ப்பந்தம் மாவட்ட அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, டிச 17

நாட்டைப் பயங்கரவாதத்தில் இருந்து காப்பாற்ற கூடுதல் நிதியை ஒதுக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இப்படி குருநாகல் மாவட்ட அமைச்சர் திரு. காமினி ஜெயவிக்கிரமா சொன்னார்.

பன்னல என்னும் இடத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் தேசிய துணைப் படையினரின் அணி வகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக் கொண்டார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதில்தான் எமது தலைவர்கள் நாட்டங் கொண்டுள்ளனர்.

துரதிர்ஷ்டவசமாக பயங்கரவாதம் எமது தலைவர்களைத் திசைதிருப்பிவிட்டது.

இதன் காரணமாக தேசிய பாதுகாப்புக்குக் கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. நிர்ப்பந்தம் காரணமாக இதைச் செய்கின்றோம்.

இப்படி மாவட்ட அமைச்சர் மேலும்சொன்னார்.

### மூவர் தவிர ஏனையோர் விடுதலை

திருகோணமலை, டிச. 17

அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், சாம்பல்தீவுப் பகுதிகளில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழர்களில் மூன்று பேரைத் தவிர ஏனையோர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

3 பேரும் விசாரணைக்காக ஆயுதப்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

### தென் இலங்கையில் இதுவரை 97 பேர் கைது

யாழ்ப்பாணம், டிச. 17

தென் இலங்கையில் இடதுசாரிப் போக்குள்ள 97 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனதா விமுக்தி பெரமுன உறுப்பினர்கள் பலரும் இதில் அடங்கியுள்ளனர்.

வடபகுதிப் போராளிகளுடன் சேர்ந்து இந்த அரசாங்கத்தை கவிழ்க்க இவர்கள் திட்டம் தீட்டினார்கள் என்ற சந்தேகத்தை அடிப்படையாக வைத்தே, இரகசியப் பொலிஸார் விசாரணைகளை நடத்துகின்றனர்.


குவைத்

பணிப் பெண்களை அழைக்கின்றது!

குவைத்துக்குப் பணிப்பெண்கள் தேவைப்படுகின்றனர்!

காலதாமதம் செய்யாது உடன் தொடர்புகொள்ளுங்கள்,

லிப்ருஸ் லிமிட்.,

R. G.கட்டடம், 72,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road, PETTAH, T'Phone: 29148

* மேற்கு ஜெர்மனி * பிரான்ஸ் * இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி இம்மாதம் 23ஆந் திகதி உங்களைப் பாதுகாப்பாக அழைத்துச்செல்வார்.

## உதய சங்கற்பம்

கடவுளை ஒருவன் தரிசிப்பதால் பெறுவதென்ன? அடைகிறானா? அவனுக்கு இரு கொம்புகள் முளைத்துவிடுகின்றனவா? அல்ல, அவன் மனம் பரிசுத்தம் அடைகிறது. மனம் பரிசுத்தம் அடைவதால் அவனுக்கு மெய்மறதியும், ஞான விழிப்பும் ஏற்படுகின்றன.

—அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, லேடீ ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24806 22073

17-12-85 த. பெ. 23


## ஸியாவின் ஆயுத உதவி

இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் ஆயுத உற்பத்தி செய்யும் நாடல்ல. வெளிநாடுகளுக்கு ஆயுதம் விற்கும் கூட்டுக்தாபனமும் அல்ல. நாம் ஆயுதம் உற்பத்தி செய்யும் நிலையில் இருப்பின், இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்க நிச்சயம் ஆயுத உதவி செய்திருப்போம்.

ஆயுத உதவி குறித்து விளக்கம் தந்த போது ஸியா மேற்கண்டவாறு விவரித்தார். தமது ஐந்துநாள் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர் அவர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அப்போதே இந்த விவரம், விளக்கம் எல்லாம் தரப்பட்டன.

இலங்கையும் பாகிஸ்தானும் நட்பு நாடுகள். அயல் நாடுகள். தென் ஆசிய நாடுகள் சங்கத்தின் உறுப்பினர்கள். அணிசேரா இயக்கத்தின் அங்கநாடுகள். ஆகையால் அவை ஒன்றுக்கு மற்றொன்று உதவ வேண்டும்.

இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பயங்கரவாதம் போன்று நாளை பாகிஸ்தானில் ஏற்படலாம். எனவே நாம் இலங்கைக்கு ஆயுத உதவி வழங்கினாலும் யார் கேட்பது என்ற தோரணையில், ஸியா பத்திரிகையாளர் மாநாட்டில் பதிலளித்திருக்கிறார்.

அரசியல்வாதிகள், அதுவும் அரசாங்கத் தலைவர்கள் தாம் நினைத்ததைச் செய்வார்கள். பின்னர் தாம் செய்தது சரியெனக் காட்டி 'சப்புக்கட்டை' நியாயம் பேசுவார்கள்.

அந்த விதிமுறைக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா விலக்காக இருக்க முடியாது. தமது நாட்டில், ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கத்தைக் கவிழ்த்து, பிரதமர் அலி பூட்டோவைப் பதவிவாங்கி, அவரைத் தூக்குமேடைக்கு அனுப்பி, அதற்கு முன்னரே உயிரைவாங்கிதாம் நினைத்ததைச் சாதித்து மக்கள் ஆட்சிக்குச் சாவு மணி அடித்தவர் இந்த ஸியா. அதுவும் பயங்கரவாதம்தானே.

தமது நாட்டில் சிவில் யுத்தம் வெடிக்கும் ஒரு நிலை தோன்றியபடியால் தான் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக ஸியா கூறியிருக்கிறார்.

அதுபோல, இலங்கை அரசாங்கம் கூறும் "பயங்கரவாதம்" உருவாகுவதற்கு அடிப்படைக் காரணம் எது என்பதை தமது நண்பரிடம் ஸியா கேட்டிருக்க வேண்டும் அவர் கேட்டிருந்தாலும் கூட எமது நாட்டுத் தலைவர் உண்மைக் காரணத்தைக் கூறியிருப்பாரோ என்பது சந்தேகமே.

தமிழ் மக்கள், கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும், வாழும் நாட்டின் சமத்துவமுள்ள இனம் என்று கூறிக்கொள்ளும் அளவுக்கு அவர்களது உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா?

மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, சொந்த மண்ணை அபிவிருத்தி செய்தல், பாதுகாத்தல் ஆகிய துறைகளில் அவர்களுக்குச் சுதந்திரம் உண்டா?

அவர்கள் தமது பிரதேச அலுவல்களை தாம் நினைத்தவாறு செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா?

இல்லை. இல்லை. இல்லை!

இனம் இனத்தைச் சேரும் என்பார்கள். தமது குறைபாடுகளை வெளியே காட்டாமல், தாம் செய்வதைச் சரியெனக் காட்டும் அரசியல் தலைவர்கள் நிச்சயம் நண்பர்களாகவே இருப்பர். அதனை ஜனாதிபதி ஸியா சொல்லித்தான் எவரும் தெரியவேண்டும் என்பதில்லை.

தாம் புரிந்த பயங்கரவாதத்தை நியாயப்படுத்திக் காரணம் காட்டும் ஸியா இலங்கையில் "பயங்கரவாதம்" இடம் பெறுவதற்கான அடிப்படைக் காரணத்தை தாமாக அறிய முனைந்திருக்க வேண்டும் அவர் அப்படிச் செய்தாரா? தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எவரையும் சந்தித்து அவர்களின் போராட்டத்துக்கான அடிப்படைக் காரணத்தை அறிய வேண்டும் என்று நினைத்தாரா?

எனவே அவர் இலங்கைக்கு ஆயுத உதவி செய்ய நினைத்ததில் வியப்பில்லை. தமது நாட்டில் ஆயுதங்களை உற்பத்தி செய்யாவிடினும் வேறு விதமாக அவற்றை வழங்கினாலும் எவரும் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

# மலையக தமிழருக்கு இழைத்த துரோகம் மறையவில்லை

## சத்தியேந்திராவின் பேட்டி

பிரபல சட்டத்தரணி திரு. சத்தியேந்திரா, ராணி அப்புக்காத்து எஸ். நடேசனின் புதல்வர்.

தமிழ்ப் போராளிகளுக்காக நீதிமன்றத்தில் வாதாடியவர்.

திம்பு மாநாட்டின் 2-ஆம் கட்டத்தில் தமிழ ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கிய பிரதிநிதியாகக் கலந்துகொண்டு சர்ச்சைக்கு உரியவராக விளங்கியவர்.

அமெரிக்கா ஹவாயில் இருந்து வெளிவரும 'ஹிண்டுயிஸம் ருடே' மாதமிருமுறை ஆங்கில சஞ்சிகைக்கு திரு. சத்தியேந்திரா அளித்த பேட்டியே இது.

பேட்டி கண்டவர்: டாக்டர் ஷண் சுந்தர்

தமிழ் ஈழத்தில் ஜனநாயக அரசாங்கமே இருக்கும்.

அது சோஷலிச அரசாக இருக்கலாம். ஆனால் கம்யூனிஸ்ட் அரசாங்கமாக அது இருக்காது என்பது நிச்சயம்.

சுதந்திரமான தேர்தல் நடக்கும் ஜனநாயக நடைமுறை இருக்கும். எல்லா அமைப்புகளும் இப்படித்தான் என்னிடம் கூறின.

பிரபல சட்டத்தரணி திரு. நடேசன் சத்தியேந்திரா பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டார்.

'ஹின்டுயிஸம் ருடே' (இந்துசமயம் இன்று) என்ற மாதமிருமுறை ஆங்கில சஞ்சிகையில் திரு. சத்தியேந்திராவின் பேட்டி வெளியாகியது.

தமிழ் ஈழத்தில் என்ன மாதிரியான அரசாங்கத்தை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்ற கேள்விக்கே திரு. சத்தியேந்திரா மேற்கண்டவாறு பதிலை அளித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:

கேள்வி: ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் இடங்களில் உள்ள தமிழ் மக்களுடன் நீங்கள் பேசுவதன் நோக்கம் என்ன?

பதில்: உலகில் உள்ள தமிழர்களை எல்லாம் ஒன்றிணைக்க வேண்டும். அவர்களில் அநேகர் இன்று நாடோடிகளாக வாழ்கின்றனர்.

அவர்களுடன் எண்ணங்களைப் பகிர்வது மட்டும அல்ல எமது நோக்கம். ஒரு அமைப்பின் கீழ் அனைவரையும் கொண்டுவரவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

கேள்வி: தமிழர் நெருக்கடி குறித்து சைவசமயத் தலைவர்களின் ஆலோசனை என்ன?

பதில்: 'எல்லா வன்முறைகளும்பிழை' என்ற மனப்பாங்கே நிலவுகின்றது.

எனது மனதில் உள்ளது அஹிம்சைதான் சரியான பதில் என்பதே.

அஹிம்சை வழியில் நடக்க மிகவும் வீரம் தேவை. வன்செயலுக்கு தேவையான வீரத்திலும் பார்க்கக் கூடிய வீரம் அஹிம்சைக்குத் தேவை.

கொலை செய்வதற்குத் தேவையான இலட்சியம் எதுவும் என்னிடம் இல்லை. ஆனால் எனது இலட்சியத்துக்காக நான சாகத் தயாராக உள்ளேன்'-இப்படி மகாத்மா காந்திஜி சொன்னார். ஈற்றில் அதுதான் வரும்.

'அஹிம்சைதான் ஒரே வழி'- என்று ஒருவர் சொல்ல இலங்கை அரசும் அஹிம்சையாக இருங்கள்' என்று சொன்னால் எதை நம்புவது என்பதில் இடைவெளி நிச்சயம் இருக்கும்.

இலங்கைஅரசுக்குமுன்னால் எழும்பி நின்று 'அரசு செய்வது பிழை மட்டுமல்ல. அதன் திட்டத்தில் ஒரு பின்னணி மறைந்துள்ளது போல தெரிகின்றது'- என்று சொல்ல வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

கேள்வி: தமிழர்களின் முயற்சியில் சைவசமயம் முக்கிய பங்கு வகிக்கிறதா?

பதில்: எமது சரித்திரத்தைப் பார்க்கவேண்டும். 5,000 ஆண்டுகளுக்கு முந்தியது திருமூலரின் திருமந்திரம்.

'தமிழும் சைவமும், சைவமும் தமிழும்' என்றுகூறப்படுகின்றதே. அது வெறும் வார்த்தைகள் அல்ல.

தமிழர்களின் மொழி, மதம் எல்லாவற்றையும் இணைக்கும் சக்தி மிகுந்த சொற்றொடர் அது-இரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது.

கேள்வி: தமிழ்ப்பையன்கள் சார்பில் நீங்கள் வாதாடியதுபற்றிக் கூறுவீர்களா?

பதில்: பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கலான முதல் வழக்கில் 5 போராளிகளுக்காக நான் வாதாடினேன். இது 1982 செப்டம்பர் - அக்டோபரில் இடம்பெற்றது.

வழக்கின் பெரும்பாலான சாட்சியங்கள் போராளிகளிடம் இருந்து பெறப்பட்ட ஒப்புதல வாக்குமூலங்களே. ஒப்புதல் வாக்குமூலங்கள் சித்திரவதை, துன்புறுத்தல்கள் மூலம் பெறப்பட்டன.

எதிரிக்கூண்டில்இருந்து ஒரு போராளி விடுத்த வாக்குமூலம் இன்னும் எனக்கு நினைவுக்கு வருகின்றது.

"நாம் மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லர். வன்செயலை விரும்புபவர்களும் அல்ல.

எமது மக்களின் சுதந்திரத்தற்காக நாம் இன்று போராடிக் கொண்டு இருக்கின்றோம் போராட நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்"-இப்படி அந்தப் போராளி கூண்டில் இருந்து சொன்னார்.

கறைபடியாத சிலரைச் சந்தித்தேன என்ற உணர்வு எனக்கு அந்தக் கணமே ஏற்பட்டது.

அவர்கள் செயலில் தாய்மை தெரிந்தது.

இறுதியில் அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனைகளை எதிர்த்து அப்பீல செய்தனர் அப்பீல் முடிவை எதிர்பார்த்து சிறையில் இருந்த சமயம் 1983 ஜூலையில் வேறு 45 பேருடன் கொலலப்பட்டனர்.

இவற்றைப் பார்க்கும் போது ஒரு போராட்டம் நடக்கின்றது என்று சொல்லலாம்.

பரந்த அடிப்படையில் நம்பிக்கை வைத்துள்ள நாம், யதார்த்தமாக ஏதாவது செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

காரணம் ஏராளமான இளம் உயிர்கள் பலியாகி உள்ளன.

கேள்வி: தமிழ் ஈழம் அமையும் பொழுது, கிழக்கு மாகாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்படுவார்களா?

பதில்: முஸ்லிம்களும் தமிழ் பேசும மக்கள். அவர்கள் அங்கு இருப்பார்கள். முஸ்லிம் விடுதலைப் போராளிகளும் ஏராளமாக உள்ளனர்.

அவர்களில் வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்கள், சொந்த நலன்களுக்காக சிங்கள பௌத்தர்களுடன் அடையாளங் காட்டப்படுவதையே விரும்புகின்றனர். பெரும்பாலான முஸ்லிம்கள் தமிழர்களே. அவர்கள் தமிழருடன் அடையாளங் காணப்படுவதையே விரும்புகின்றனர்.

கேள்வி: தமிழ் ஈழத்தில் இருந்து பெருந்தொகையான சிங்களவர் வெளியேற்றப்படுவார்களா?

பதில்: சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஏற்கனவே இடம் பெற்ற குடியேற்றத்திட்டங்களைக் கலைக்க வேண்டும் என்பதும் எமது கோரிக்கைகளில் ஒன்று.

1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் உருவான குடியேற்றத் திட்டங்கள் அனைத்தும் கலைக்கப்பட வேண்டும்.

பேச்சுக்களின் போதும் குடியேற்றத் திட்டங்கள் கலைக்கப்பட வேண்டும் என்பதும் ஒரு முன் நிபந்தனையாக இருக்கும்.

இரண்டாவது நிபந்தனை, தமிழ்ப்பகுதிகளில் இருந்து ஆயுதப்படையினர் வாபஸாக வேண்டும்.

மூன்றுவது, சிறை வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

கேள்வி: மலையகப்பகுதி தமிழர்கள், தமிழ் ஈழத்துக்குக் கொண்டு வரப்படுவார்களா?

பதில்: ஆம். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போய் குடியமருவதே அவர்களின் எண்ணமுமாகும்.

காரணம், தமிழ் ஈழத்தை, மத்திய மாகாணத்துக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று நாம் கேட்க முடியாததே.

மலையகத் தமிழர், வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்குக் கொண்டு வரப்படுவர்.

அவர்களுக்குக் காணி வழங்கப்படும்.

1978 கலவரத்தின் பின்னர் ஏராளமான மலையகத் தமிழர் காந்திய இயக்கத்தினால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர்.

கேள்வி: யாழ்ப்பாணத் தமிழர், மலையகத் தமிழரை பாரபட்சமாக நடத்திய பிரச்சினை பற்றி என்ன சொல்கின்றீர்கள்?

பதில்: அது உண்மை. சுதந்திரம் பெற்ற பின்னர் எமது தமிழ்த் தலைவர்கள், சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து மலையகத் தமிழரின் பிரஜா உரிமையைப் பறிக்கும் சட்டத்துக்கு வாக்களித்தனர்.

இது எமது தமிழ் மக்கள் திட்டமிட்டுச் செய்த பாரபட்சமான நடவடிக்கை.

இதனால் மலையகத் தமிழரின் பிரஜா உரிமை நிரந்தரமாகப் பறிக்கப்பட்டது.

இது ஒரு துரோகமான நடவடிக்கை. தமிழ் நாட்டில் உள்ள மக்கள், அரசியல் தலைவர்கள், நம்மவர் செய்த இத்துரோகத்தனத்தை இன்னும் மறக்கவில்லை.

எம்முடன் இன்று இணைந்து பாடுபட்டாலும் நிறைய உதவிகள் செய்தாலும் ஏற்கனவே செய்யப்பட்ட துரோகத்தனம் குறித்து அவர்களால் மறக்கமுடியாது உள்ளது. காலம் தான் இதை மறக்கச் செய்ய வேண்டும்.

கேள்வி: இந்துசமயம், தமிழ்ஈழம் பிரச்சினையில் வகிக்கும் பங்கு என்ன?

பதில்: பெரும்பான்மையான விடுதலைப்போராளிகள் இந்து மதத்தவர். போராளிகளைச் சந்தித்த சமயம் அவர்கள் மத்தியில் முஸ்லிம்களையும் கண்டேன்; இந்தியத் தமிழர்களையும் கண்டேன். எல்லாரும் சமமாக நடத்தப்படுகின்றனர்.

முஸ்லிம், இந்து, கிறிஸ்தவன் ஆகியோருக்கிடையே பிளவுகளை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு இயன்றவரைமுயற்சிக்கின்றது.

நாங்களும் எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றக் கூடாது.



## பொய்யாமொழி

குறள்:
ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

பொருள்:
ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்.

கிளிநொச்சி

## கச்சேரி அமைப்புக்கு மீண்டும் நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி டிச,17

கிளிநொச்சியில் புதிதாகக் கட்டப்படும் கச்சேரிக் கட்டட வேலைகளுக்கென இரண்டாம் கட்டமாக நான்குலட்சம் ரூபா கிளிநொச்சி கச்சேரி அமைப்புக்குமீண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு என். ஜெயநாதன் மேற்கொண்ட முயற்சியினைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்தத்தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியில் இருந்து தற்போது சுமார் 11 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கச்சேரிக் கட்டட மிகுதி வேலைகளும், காணிக் கிளைத் திருத்த வேலைகளும் சிற்றுண்டிச்சாலை திருத்தவேலைகளும் திட்டமிடல் அலுவலகத்திற்கான முதற்கட்ட வேலைகளும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இம்மாதம் முடிவுக்குள் வேலைகள் யாவும் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன.

இது இவ்வாறிருக்க கிளிநொச்சி மக்களின் நீண்ட காலபெருங்குறையாக விளங்கும் பதிவாளர் அலுவலகத்திற்கான ஒரு நிரந்தரக் கட்டடம் ஒன்றினை 86ம் ஆண்டு அபிவிருத்தி நிதியில் கட்டி முடித்து பதிவாளர் அலுவலகத்தினை உடனடியாகத் திறக்கவும் மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

## பிக்குவின் மோட்டார் சைக்கிள் அபகரிப்பு

மட்டக்களப்பு டிச, 17

கல்லவன்கேணியில் பௌத்த பிக்கு ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளை இடப்பட்டது.

சனிக்கிழமை நடந்த இச்சம்பவம் பற்றி மட்டக்களப்புப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

## மக்கள் முகம்

### ஆலோசனை சபை

பருத்தித்துறை, டிச.16

பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்துக்கென ஆலோசனைச்சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது:

இச்சபையின் உத்தியோகத்தர்களாகப் பின வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ரி. சற்குணானந்தராசா (பருத்தித்துறை அஞ்சலதிபர்) உபதலைவர் திரு. எம். நடராசா (இளைப்பாறிய அஞ்சலகக் கட்டுப்பாட்டாளர்) செயலாளர் திரு. ரி. ரி. சண்முகநாதன் (பருத்தித்துறை உதவி அஞ்சலதிபர்:

அத்துடன 7பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

அக்குழு உறுப்பினர்கள் விவரம் வருமாறு.

திருவாளர்கள் கே. அழகரத்தினம் (உபமுகாமையாளர் இலங்கை வங்கி) கே. வி. முத்துக்குமாரசாமி (ஓய்வுபெற்ற அஞ்சலதிபர்) எம். அருணானந்தம் (பிரதமலிகிதர் பருத்தித்துறை நகர சபை) எஸ். மாணிக்கவாசகர் (வ. பி. போ. ச. பருத்தித்துறை டிப்போ முகாமையாளர்) கே. சக்திவேல் (பருத்தித்துறை தொலை தொடர்புப் பரிசோதகர்) எஸ். பாலசிங்கம் (இளைப்பாறிய அஞ்சலகக் கட்டுப்பாட்டாளர்) எம். பி. வீரவாகு (பருத்தித்துறை பிரபல வர்த்தகர்)

### சுட்டுக் கொலை

புதுடில்லி, டிச. 16

நாலகு ஹரிஜனங்கள் வட உத்தரப் பிரதேசத்தில் சுட்டுக் கொலலப்பட்டனர்.

உயர்சாதி இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இவர்கள் சுடப்பட்டதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

## விஸ்தாரம்

முரளி! முரளி! என்ன கனநேரமா உன்னைக் காணயில்லை? எங்கே போனனி.

ஓ, சரி, சரி! நீ முச்சந்திக்குப் போய் பிரசங்கம் வைக்கிற நேரமெல்லே, நான் மறந்து போனேன்.

என்ன, இண்டைக்கு என்ன செய்தி, சங்கதி, ஊர்வம்பு எல்லாம் அலசினனீங்கள்?

அட அந்த விஷயத்தையும் நீங்கள் விட்டுவைக்கிறயில்லைப்போலை!

ஓ, உந்த இனப்பிரச்சினை எண்ட எங்கடை பிரச்சினை இப்போதைக்கு முடியாதுபோலை. உவை அரசாங்க்காரர் தங்கடை பதவிக்காலம் அதாவது 89ஆம்ஆண்டு முடியும் வரைக்கும் எப்படியாவது இதை இழுத்தடிச்சுப் போட்டால் தங்களுக்குவெற்றி எண்டு நினைக்கினம்.

தமிழ்ச்சனம் சாகிறதைப்பற்றியோ அல்லது அதுகள்படுற கஷ்டத்தைப்பற்றியோஅவைக்கு என்ன கவலை! ஏன் அவை என்ன எங்கடை வோட்டு வாங்கியே 'சிம்மாசனம்'ஏறினவை?

அவைக்குப் பார்லிமெண்ட் எலக்சனிலையும், ஜனாதிபதி எலக்சனிலையும், சர்வசன வாக்கெடுப்பு எண்ட 'ஏமாத்து' எலக்சனிலையும் வோட்டுப்போட்ட சிங்களமக்களைப்பற்றியாவது அவை கவலைப்படுகினம்எண்டே நினைக்கிறாய்? அதுதான் இல்லை!!! விலைவாசி உயர்வு எண்ட பெரிய பூதத்தைத் 'பயங்கரவாதம்' எண்ட மந்திரத்தைஅடிக்கடி உச்சாடனம் செய்து ஓட்டப்பாக்கினம். ஆனா அது செடுகவும் சரிவராது கண்டியளோ!

தமிழ் பெடியளுக்கும், சிங்களப் பெடியளுக்கும் ஏதோ ஏதோ தொடர்பு எல்லாம் இருப்பதாகச் சொல்லி, தெற்கிலையும் கண்ட நிண்ட மாதிரி அங்கத்தையில் பெடியன்களைப் பிடிச்சுக் கொண்டு போகினமாம். அதை எதிர்த்து "மஞ்சள் குருவி" தலைமையிலை ஒரு இயக்கம் சத்தம் போட்டிருக்குது. "மஞ்சள்குருவியளை"க்காட்டி, அதுகளைக் கொஞ்சம் "ஏத்தி" விட்டுச் சில காரியங்களைச் செய்யிறவை. எங்களுக்கு ஏதாவது தரப்போறுன் எண்டு சொல்லிப் போட்டும் பிறகு அந்தக் "குருவிகளை" ஏவித்தானே அதை மறிக்கிறவை. இப்ப அதுகளே அவைக்கு எதிராப் பறக்கிற காலம் வந்திட்டுது. அதனாலை அங்கத்தைச் சனத்தை இனிக் கன காலத்துக்கு ஏமாற்ற முடியாது. எண்டுதான்நினைக்கிறன். ஏதோ----

அங்காலை ஆய்க்கினை கூடக் கூட, எங்களிலை தான் ஏறிப்பாய்வினம்.

ஏதோ சமாதானத் தீர்வு எண்டு இந்தியாவும் படாதபாடு படுகுது. இவை இஞ்சை சேரத்துக்கு ஒண்டைச் சொல்லி, எல்லாத்தையும் குழப்பி அடிக்கினம்.

எங்கடை 'அச்சாணி' யார் இந்தியாவுக்குப் போவார் எண்டு அக்கரையிலை எதிர்பாக்கினமாக்கும். ஆனால் அவர் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பேப்பர்வழிய அரைகுறையாச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

எப்பிடி, எப்பிடி எண்டாலும் தீர்வின்ரை ஆரம்பமே எங்கடை தமிழ் புதுவருஷத்துக்குப் பிறகு தானும் எண்டு அக்கரையிலிருந்து ஒரு சேதி. நடக்கப் போவதை சரியாச் சொல்ல முடியாத காலம்

(4-ஆம் பக்கம் பார்க்க)

—கோண்டாவில்

நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
நவீன டிசைன்களில் அமைந்த
கிறிஸ்மஸ், புதுவருட அழகிய
வாழ்த்து மடல்கள்
பெற்றுக்கொள்ள
மக்மில்லன் புத்தகசாலை
இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

# உதயன்

17-12-1985

1986ஆம் ஆண்டு
டயறிகள், கலண்டர்கள்
மற்றும், பாடசாலை மாணவர்களான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், ஸ்ரேஷனறிச் சாமான்கள் போன்ற எல்லா வித தேவைகளுக்கும்
நாடுங்கள்
மக்மில்லன் புத்தகசாலை
இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

# மாவட்டத்திற்குள் இடமாற்றம் இல்லை

## திருமலை ஆசிரியர்களுக்கு

திருகோணமலை, டிச.17

திருகோணமலை மாவட்டத்திற்குள் வருடம் தோறும் நடைபெறும் ஆசிரியர் இடமாற்றம் அடுத்த வருடம் நடைபெறமாட்டாது.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாகபலகிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறிவிட்டனர். இதன் காரணமாக அப் பகுதி பலவிங்கள, தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இன்னும் சில பாடசாலைகள் அகதிகள் முகாம்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

வன்செயல் நடைபெற்ற பிரதேசங்களிலும், பிரயாண வசதியற்ற கிராமங்களிலும் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இவ்வருட இறுதிவரை தற்காலிகமாக நகரப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் அடுத்த வருடத்திலும் இத்தற்காலிக இடமாற்றங்கள் தொடர்ந்து நிலைக்கக் கூடிய நிலைமையே காணப்படுகின்றது.

ஆகவே இத்தகைய நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான இடமாற்றம் ஒன்றைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதிருக்கின்றது; அத்தகைய ஒரு சூழ்நிலையும் காணப்படவில்லை என்று திருகோணமலை மாவட்ட கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

ஆசிரிய பயிற்சி கலாசாலைகளிலிருந்து வெளியேறி அடுத்த வருடம் முதல் இம்மாவட்டத்திற் கடமையாற்ற ஆக மூன்று ஆசிரியர்களே வரவுள்ளனர் எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

### பாதிக்கப்பட்ட ஆசிரியர் விபரம்

திருகோணமலை, டிச. 17

திருகோணமலையில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களைத் தொகுப்பதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க திருகோணமலைக் கிளையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது பெயர், முகவரி, பாடசாலை, பாதிப்பின் தன்மை, பாதிப்பு நிகழ்ந்த திகதி ஆகிய விபரங்களுடன் திருகோணமலைக் கிளைச் செயலாளர் திரு. நா. இராஜநாதனுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கண்காணிப்புக் குழுவின்

## திருகோணமலை அத்துமீறல்கள் பற்றிய அறிக்கை விரைவில்

யாழ்ப்பாணம், டிச 17

திருகோணமலை மாவட்டத்தில் நிகழ்ந்த அத்துமீறல்கள் குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு விரைவில அறிக்கையைச் சமர்ப்பிக்க உள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடந்த வெள்ளிக்கிழமை தருமலைக்கு விஜயம் செய்தது.

மூதூர், சம்பூர், சேனையூர், கட்டைப்பறிச்சான், தெஹிவத்த, தபல மம், கந்தளாய, ஆலங்கேணி கிராமங்களில் இடம்பெற்ற யுத்த நிறுத்த அத்துமீறல் சம்பவங்கள், அப்பாவித் தமிழர் கொலையுண்டமை, தமிழ்ப்பெண்கள் மானபங்கபடுத்தப பட்டமை ஆகியன குறித்து கண்காணிப்புக் குழு சாட்சியங்களைப் பதிவு செய்தது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் 30 பேர் குழு முன்னிலையில் சாட்சியம் அளித்தனர்.

பிரஜைகள் குழுக்கள் பிரதிநிதிகளின் முறைப்பாடுகளையும் கண்காணிப்புக் குழு கேட்டறிந்து கொண்டது.

கண்காணிப்புக் குழு தனது அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கும் என்று தெரிகின்றது.

* கள்ளக்கடத்தல்
* பாஸ்போர்ட் மோசடி

## இலங்கை - இந்திய அதிகாரிகள் பேச்சு

கொழும்பு, டிச.17

இலங்கை — இந்தியாவுக்கு இடையேயான கள்ளக் கடத்தல், பாஸ்போர்ட் மோசடி சம்பந்தமாக இரண்டுநாட்டு சுங்க அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

நாளை புதன் கிழமை இப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின்றன. வெள்ளிக்கிழமை வரை பேச்சு நீடிக்கும்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் இந்தியக் குழு, கொழும்பு வந்துள்ளது.

டில்லி சுங்க அதிகாரி திரு. வி. வி. குமார் இந்தியத் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்குகின்றார்.

இலங்கைக் குழுவுக்கு பிரதம சுங்கக் கலக்டர் திரு. எச். பி. திஸாநாயக்க தலைமை வகிக்கின்றார்.

இலங்கையில் இருந்து மின்சார உபகரணங்கள், தங்கம் முதலியன இந்தியாவுக்குக் கடத்தப்படுகின்றன.

இந்தியாவில் இருந்து ஜவுளி வகைகள் இலங்கைக்குள் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்படுகின்றன.

இத்துடன் பாஸ்போர்ட் மோசடியும் இடம் பெறுகின்றது.

இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் மேற்கண்ட பிரச்சினைகள் எல்லாம் அலசி ஆராயப்படும் என்று தெரியவருகிறது.

இரு தரப்பும் சேர்ந்து, முக்கிய கள்ளக் கடத்தல் காரரின் பெயர்களை மாதந்தோறும்வெளியிட வேண்டும் என்று இலங்கை யோசனை கூறியுள்ளது.

அந்தயோசனையும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிகின்றது.

## தமிழ் இளைஞருக்கு எகிப்தில் மரண தண்டனை

கெய்ரோ. டிச.16

போதைப் பொருள்களை கடத்த முயன்ற குற்றச்சாட்டிற்காக இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு எகிப்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

கே. பிரேமச்சந்திரன் என்ற இந்த இளைஞர் கடந்த மார்ச்சில் கெய்ரோ விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அப்போது அவர் வசம் 3 கிலோ ஹிரோயின் இருந்ததாகக் கூறப்படுகிறது

கடந்த சனிக்கிழமை இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எகிப்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் இவரே.

இவரது விடயம் பற்றி இலங்கை வெளிநாட்டமைச்சு எகிப்திய அரசின் அறிக்கையை எதிர்பார்த்திருக்கிறது.

போதைவஸ்து கடத்தல் குற்றத்திற்காக இஸ்ரவேலர் ஒருவருக்கும் எகிப்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

## சாரதா சேவாச்சிரமம் இலவச சேவை

யாழ்ப்பாணம்,டிச 17

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம் இலவச மருத்துவசேவை ஒன்றை நடத்திவருகின்றது.

இதுவரை 513 பேர் இலவச மருத்துவ சிகிச்சையால் பயன அடைந்துள்ளார்கள்.

அடுத்த வருடத்தில் இலவச மருத்துவசேவை விரிவு படுத்தப்படவுள்ளது. வைத்திய சிகிச்சைக்குத் தேவையான கருவிகள் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப் படவுள்ளன.

## கல்பாக்கம் அணு உலை நேற்று திறப்பு

சென்னை, டிச. 16

தமிழ்நாட்டில் உள்ள கல்பாக்கம் அணுசக்தி உலையின் இரண்டாம் பிரிவை பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று பிற்பகல் திறந்துவைத்தார்.

அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு இந்திரா ஆராய்ச்சி நிலையம என்று பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

இங்கு பேசிய பாரதப் பிரதமர் காந்தி, "அணுசக்தி தவறுகப் பயன் படுத்தப்பட்டுவிடக் கூடாது. ஆன்மசக்தியும் அணுசக்தியும் இணைந்து செயல்படுதல் வேண்டும் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

அணுசக்தியை சமாதான வழியில் பாவிக்க வேண்டும் என்பதில் இந்தியா அசைக்க முடியாத மன உறுதி கொண்டுள்ளது" என்றும் சொன்னார்.

## அரிசி ஆலைக்கு சேதம் இல்லை

மட்டக்களப்பு, டிச17

குண்டு வெடிப்பில் சித்தாண்டி அரிசி பதனிடும் ஆலைக்கு எதுவித சேதமும் ஏற்படவலலை.

விடுதிகள் மட்டுமே குண்டுகள் வைக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டன.

கொள்ளையின் எதிரொலி

## மட்டக்களப்பு தபாலகம் இன்னும் வழமைக்கு இல்லை

மட்டக்களப்பு, டிச. 17

மட்டக்களப்பு தபால் நிலையம் இன்னும் வழமைபோல் கடமையாற்றத் தொடங்கவில்லை.

மட்டக்களப்பு தபால் நிலையத்தை இனந்தெரியாத நபர்கள் ஆயுதங்களுடன் சென்று சனிக்கிழமை காலை கொள்ளை அடித்தனர் என்பது தெரிந்ததே.

காசுக்கட்டளை, தபாற் கட்டளை, வானொலி, டெலிவிஷன், கவுண்டர்கள் திங்கட்கிழமை திறக்கப்படவில்லை.

முத்திரைகளும் தபால் நிலயத்தில் கையிருப்பில் இல்லை.

தந்திகள், பதிவுசெய்த தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனல் அவற்றுக்கான முத்திரைகள் வழங்கப்படுவது இல்லை.

காசுக்கட்டளை கொடுத்தே ரயில் டிக்கட்டுகள் பெறவேண்டும். ஆனல் காசுக்கட்டளை வழங்கப்படாததால் ரயில் பயணிகள் பெரிதும் கஷ்டம அடைந்தனர்.

தபால் விநியோகம் வழமைபோல் நடைபெற்றது.

கொள்ளை இடம்பெற்ற அன்று தபால் நிலையத்தில் இருந்து ஆறு தொலைபேசிகளும் துண்டிக்கப் பட்டன.

திங்கள் ஒருதொலைபேசி இணைப்பு சீராக்கப்பட்டது

அதன் மூலம்தான் தந்திச் சேவைகள் நடத்தபபடுகின்றன.

## நாளை பஜனை

யாழ்ப்பாணம்,டிச 17

அகில இலங்கைத் திருமுறை மன்றம் இவ்வாண்டும் திருவெம்பாவை வீதி பஜனை நடத்த உள்ளது.

நாளை திருவெம்பாவை பஜனை ஆரம்பமாகிறது.

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இருந்து தினமும் அதிகாலை 4 30 மணியளவில் வீதி பஜனை ஆரம்பமாகி நடைபெறும்.

## பலியானவர் அடையாளம் காணப்பட்டார்

மட்டக்களப்பு, டிச.17

சித்தாண்டி, தேவபுரம் பகுதியில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம செய்ததில் இறந்தவர் வன்னியசங்கம் என்ற 18 வயது இளைஞர் என்று அடையாளம் காணப்பட்டது.

பொலிஸ் ஜீப் மீது குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்துஇடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலே இந்த இளைஞர் கொல்லப்பட்டார்.

## அஞ்சலி

யாழ்ப்பாணம் டிச. 17

புரட்சிகரசழவிடுதலைக் கழகம் மறைந்த இரண்டு போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளது.

கிரிமலையைச் சேர்ந்த சி. சிவலிங்கம், செ. நவரத்தினம் ஆகியோரே மறைந்த போராளிகள்.

'கனத்த இதயங்களுடன்' என்ற தலைப்பில் அஞ்சலிப் பிரசுரத்தை புரட்சிகர ஈழவிடுதலைக் கழக அரசியல்துறை அமைப்பு வெளியிட்டுள்ளது.

## ஆத்மீக உள்ளுணர்வுகளை விஞ்ஞானம் பாதிக்க அனுமதிக்கக் கூடாது

### ராஜீவ் வலியுறுத்து

பெங்களூர், டிச 16

விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி ஆத்மீக உள்ளுணர்வுகளைப் பாதிக்கச் செய்யஅனுமதிக்கக் கூடாது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி முதலாவது உலக கன்னட மாநாட்டில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னர்.

திங்கட்கிழமை காலை இம்மாநாடு பெங்களூரில் நடந்தது.

பாரதத்தின் வலுவே ஆத்மீக உள்ளுணர்வுகளில்தான் அடங்கியுள்ளது என்றும் பிரதமர் காந்தி வலியுறுத்தினர்.

விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் விரைவான வளர்ச்சி காணப்படுகிறது.

இது எமது கலாசார பாரம்பரியத்துக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

கன்னடத்தின் கவிமுனிவர் புரேந்திரதாஸரின் அருளுரைகளை மேற்கோள் காட்டிப் பேசிய பிரதமர் காந்தி,

"ஆத்மீக உணர்வுகளை வளர்த்து வாழ்வில் நாம் பிரச்சினைகளை வெற்றி கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்

உலகம் முழுவதிலும் இருந்து வந்த கன்னடப் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

## வித்தாரம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இது.

அதுக்குள்ளை பகல் ரோந்து இரவுத் தேடுதல் எண்டு எவனெனன நடக்குந்தா ஆருக்குத் தெரியும்,

எல்லாம் வெளி மயக்கே, இறைவா, கச்சி ஏகம்பனே எண்டு இருகக வேண்டியது தான்

## அறிவித்தல்

மேலைக்கரம்பன் அருள்மிகு முருகமூர்த்தி கோவிலில் நிகழும் மார்கழி மாதம் முதலாம் திகதி (16-12-85) தொடக்கம் முருகப்பெருமானின் திருவருளால் புது அர்ச்சகர் நியமனம் பெற்றுள்ள படியால், இனிவரும் காலங்களில் வழமை போல் கோவிலில் நடைபெற்றுவந்த திருவிழாக்கள், பூசைகள் எல்லாம் தவறாது நிகழவதற்குத் திருவருள் பாலித்துள்ளது. மேற்படி கோவில் திருவிழாக்கள் பூசைகளின உபயகாரர்களும், அன்பர்களும் மேலதிக விபரங்களுக்கு கோவில் ஆதீனகர்த்தாவுடன் நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேன். சோ. பாலகிருஷ்ணன், ஆதீன கர்த்தா, மேலைக்கரம்பன் முருகமூர்த்தி கோவில், ஊர்காவற்றுறை.

அச்சிடுவோரும வெளியிடுவோரும் தடிப்பு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம. அச்சகம் 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியிட்ட திகதி 17-12-1985

## விளையாட்டரங்கு

முதலாவது டெஸ்ட்

## சுனில் கவாஸ்கர் இன்று சாதனை படைப்பாரா?

### இன்னும் ஆறு ஓட்டங்களே பாக்கி

அடிலயிட், டிச. 17

இந்திய-ஆஸி முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடையும் நிலையை நோக்கிச் செல்லும் அதே வேளையில்,புதிய சாதனை ஒன்றை நிலைநாட்ட ஒரு களமாகவும் அது மாறியிருக்கிறது.

டெஸ்ட் உலகில் அதிக 'செஞ்சுரி' அடித்தவர் என்ற தமது சாதனையை முறியடித்து அதனை மேலும் ஸ்திரப்படுத்தும் ஒரு நிலையை இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் எட்டிப் பிடித்திருக்கிறர்.

இன்றைய ஆட்டம் அவரது சாதனையை நிலைநாட்டும் ஒரு தினமாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

நேற்று ஆட்டம் நான்காம் நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் எண்ணிக்கையான 381 ஓட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்தியா ஆடியது.

இந்திய துடுப்பாட்ட வீரர்கள் தொடர்ந்து தமது திறமையை நிருபித்தனர்.

நேற்று ஆட்டம் முடிவடையும்போது இந்தியா ஆஸ்திரேலிய எண்ணிக்கையை 10ஓட்டங்களால் முந்தியிருந்தது.

7 விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி 391 ஓட்டங்களைப் பெற்றது

நேற்றைய ஆட்டத்தில் அமரநாத் 37, ரவி சாஸ்திரி 42, கபில்தேவ் 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்திய அணித் தலைவர் கபில்தேவ் மின்னல் என பந்துகளை நாலாபுறமும் சிதற அடித்ததும், எட்டு பவுண்டரிகளை விளாசியதும் நேற்றைய ஆட்டத்தை கலகலப்படையச் செய்த சம்பவங்களாகும்.

நேற்றைய ஆட்ட முடிவின்போது சுனில்கவாஸ்கர் ஆட்டமிழக்காமல் 94 ஓட்டங்களையும், ரோஜர்பின்னி ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

சுனில் கவாஸ்கர் டெஸ்ட் ஆட்டங்களில் 30 செஞ்சுரிகளை அடித்து சாதனை புரிந்தவர். தமது சாதனையை மேலும் வலுப்படுத்தும் நிலையில் அவர் துடுப்பாடிக் கொண்டிருக்கிறர்.

இன்னும் ஆறு ஓட்டங்களை அவர் இன்று எடுப்பாராயின் அவரது செஞ்சுரி சாதனை முப்பதிலிருந்து முப்பத்தொன்ருக அதிகரிக்கும்.

நேற்றைய ஆட்டத்திலும் 28 நிமிடம் மழை, வெளிச்சம் போதாமை காரணமாக குழம்பியது குறிப்பிடத் தக்கது

## இன்று வீதியோட்டம்

யாழ்ப்பாணம், டிச 17

யாழ்ப்பாணம் சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி மிகவிரைவில் நடைபெற உள்ளது.

இல்ல விளையாட்டுப் போட்டியின் முன்னோடி நிகழ்ச்சியான 4 கிலோமீற்றர் வீதியோட்டம் இன்று நடைபெறுகிறது. இன்று காலை 6மணிக்கு நல்லூர் மருதடி வீதியில் இந்நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

இந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கான தெரிவு நிகழ்ச்சி நாளை ஆரம்பமாகும்.

## கடத்தப்படும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் தயாரித்துள்ளதாம்.

இவ் வாகனங்களை போராளிகள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப திருத்தி அமைத்து புதிய முறையில் பாவிப்பதும், கைப்பற்றப்பட்ட வாகனங்களைப் பரிசோதனை செய்தபோது வெளிவந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலீஸ் நிலயங்கள் இராணுவ, கடற்படை முகாமகளை போராளிகள் தாக்கிய சம்பவங்களில் கடத்தப்பட்ட அரசாங்க வாகனங்களே கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது

## பொதுமக்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாலேந்திரா, திரு. எஸ். எம். வி இலநாயகம் ஆகியோர்இந்நிகழ்ச்சிக்கு ஞாபகார்த்தமாக சவுக்கு மரக்கன்றுகளை நட்டனர்.

எளிய முறையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு கற்கண்டு வழங்கப்பட்டது.

தாம்போதிச் சிரமதானப் பணியில் 9-11-81 இல் இருந்து 6-6-83 வரை பங்கு பற்றிய தொண்டர் ஸ்தாபனங்களின் பெயர்கள் தங்குமிடச் சுவரில் பொறிக்கப்பட்டிருந்தன.

தாம்போதி வேலைத்திட்டம் வெற்றிகரமாக முடிவடைய ஒத்துழைத்த அரச அதிகாரிகள், தொண்டர் ஸ்தாபனங்கள், அரச நிறுவனங்கள், பொது மக்கள் அனைவருக்கும் யாழ். அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் நன்றி தெரிவித்தார்.

## அசாமில் அமைதியான தேர்தல்

புதுடில்லி, டிச.16

அசாம் மாநிலத்தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்றது. சிறு சிறு சம்பவங்களைத் தவிர பெரிய அளவிலான குழப்பம் எதுவும் நடைபெறவில்லை

மூறுன்தொகுதிகளில் நாளை (செவ்வாய்) மறுதேர்தல் நடக்கும்.

தேர்தல் முடிவுகள் நாளையும், நாளை மறுதினமும் வெளியிடப்படும்.

## வடக்கே...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வரத்து வசதி கிடைக்கவில்லை.

இவ்வாறு வவுனியா வரை கஷ்டப்பட்டு வந்து வவுனியாவில் தங்கிநிற்பவர்களில் சுகாதார பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவரும் நீதி பரிபாலனத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவரும் அடங்குவர்.

கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி 37 பீரங்கி வண்டிகளும், 6 கவச வாகனங்களும் 2 பவுசர்களும், 2 கிறெயின்களும் 3 ஜீப்புகளும் வடக்கே கொண்டு வரப்பட்டன. அவற்றுடு பல நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்களும் இங்கு வந்தனர்.

## செய்யாறு முடிவு இன்று

சென்னை, டிச. 16

தமிழ்நாடு சட்ட சபைத் தொகுதியான செய்யாறு இடைத்தேர்தல் முடிவு இன்று வெளிவரும்.

இன்று காலை வாக்குகள் எண்ண ஆரம்பிக்கப் படும்.

1 லட்சத்து 22 ஆயிரம் வாக்காளர்களில் சுமார் 75 சத விதம் இடைத்தேர்தலில் வாக்களித்தனர்.

அ. தி. மு. க. வேட்பாளராக வி. குப்புசாமியும் தி. மு. க. வேட்பாளராக வி. அன்பழகனும் போட்டியிட்டனர். இவர்களைவிட 8சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

## டிக்ஸிற்...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த மாற்றுத் திட்டத்தைத் தமது அரசாங்கம் தீவிரமாகப் பரிசிலனை செய்வதாக திரு டிக்ஸிற்றிடம் ஜனதிபதி தெரிவித்தார்.

கூட்டணி யோசனைகளை அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது என்ற செய்தி 12-12-1985ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது தெரிந்ததே. அந்தசெய்தியை ஊர்ஜிதப்படுத்தும் விதத்தில் ஜனதிபதி இந்தியத் தூதுவர் சந்திப்பின்போது தகவல்கள் பரிமாறப்பட்டன.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தாம் நடத்திய கருத்துப் பரிமாற்றம்பற்றி இந்தியஅரசுக்கு விளக்கமாக தெரிவிப்பதற்காக இந்தியத் தூதுவர் நேற்று உடனடியாகத் தாயகம் பயணமானர்.